சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் பகுதி செயலாளர் எம்.அம்பேத்குமார் மற்றும் 57வது வார்டு செயலாளர் ஆர். ஜீவா ஆகியோர் 50க்கும் மேற்பட்ட த.வெ.க வைச் சார்ந்த இளைஞர்களுடன் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாவட்ட பிரதி நிதி அ.மதுசூதனன் உடன் இருந்தார்.

மக்களின் எழுச்சியை பார்த்தால் 234 தொகுதிகளிலும் கழகத் தலைவர் தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி பெறும்!

வேட்பு மனு தாக்கல் செய்த பின்பு ஆவடி தொகுதி வேட்பாளர் அமைச்சர் சா.மு.நாசர் பேட்டி!

திருவள்ளூர் ஏப் 05;

2026 சட்டமன்றத் தேர்தலில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்காக கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் மீண்டும் வேட்பாளராக அறிவித்தார் இந்நிலையில் பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் டாக்டர் அம்பேத்கர் காமராஜர் ஆகியோர் திருவுரு சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆவடி பகுதியில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கழக நிர்வாகிகளுடன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு

ஆவடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி மாரி செல்வி அவர்களிடம் வேட்பாளர் நாசர் தமது வேட்பு மனு தாக்கல் செய்தார்

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில்

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்கள், 2021 ம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில், சொன்னதையும் செய்தார், சொல்லாததையும் செய்தார். அதனால் மக்களிடம் மிக பெரிய செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி தற்போது அறிவித்துள்ள வாக்குறுதிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றினாரோ அதேபோல், தற்போது அறிவித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையில் மக்கள் தேர்தல் நாளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். விடியல் பயணம், உரிமை தொகை, கூட்டுறவு கடன் ரத்து, பால் விலை குறைவு, சுய உதவிக் குழுவுக்கு நிதி வழங்குவது. ஒன்று முதல் ஐந்து வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், வீடு தேடி மருத்துவம், எல்லாம் தேடி கல்வி. தவிர ஆவடியில் ஐந்து ஆண்டுகளில் 34 மருத்துவ மனை திறந்துள்ளோம். ஆவடி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அறிவுசார் மையம், டைடல் பார்க் கட்டடம், பட்டாபிராம் ரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டது. வரும் காலங்களில் ஆவடியில் மெட்ரோ ரயில் திட்டம், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் திருமுல்லை வாயில் பகுதியில் நீதிமன்றம் கட்ட உள்ளோம். குடிநீர், பாதாள சாக்கடை இரண்டாம் கட்ட பணிகள் நடந்து வருகிறது. விரைவில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்படும். எனவே சொன்னது, சொல்லாதது எல்லாவற்றையும் செய்ததால் மீண்டும் தளபதி ஆட்சி அமைய வேண்டும் என மக்கள் காத்து கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை தேர்தல் அறிக்கையில், உரிமை தொகை 1000 தரப்படும், பால் விலை மூன்று ரூபாய் குறைக்கப்படும், விடியல் பயணம், கூட்டுறவு கடன் ரத்து செய்யப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்தார். தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள 51 திட்டங்களுக்கு மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பு உள்ளது,

யார் போட்டியிட்டாலும் அதை எதிர்கொள்ள எங்கள் கூட்டணி தலைவர்கள் தயாராக உள்ளனர். ஆவடியில் இந்த முறை ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை பிரகாசமாக உள்ளது. 200 தொகுதிகளில் வெல்வோம் என முதல்வர் ஸ்டாலின் சொன்னார். இன்றைக்கு உள்ள சூழல் மற்றும் மக்களின் எழுச்சியை பார்த்தால் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகர் அவர்களை ஆதரித்து கழக நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் இரா.கிரிராஜன் ஆலோசனை வழங்கினார்.உடன் கன்னிகை ஜி.ஸ்டாலின் பகுதி கழக செயலாளர்கள் க. ஜெயராமன் அ.முருகன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்

தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வீதி, வீதியாக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்!

சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, ஏப்.5-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் இன்று (6-4-2026) 139வது வட்டத்தில் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் வருமாறு:

139வது வட்டம் - காலை 7 மணி முதல் 12 மணி வரை

ஜோதிராமலிங்கம் நகர், ராஜாபாதர் தெரு, கிருஷ்ணன் தெரு, பாஸ்கரன் தெரு, கன்னியப்பன் தெரு, வி.கே.மகேதேவன் தெரு, முரசொலி மாறன் தெரு, கங்கையம்மன் கோயில் தெரு, மாணிக்கம் தெரு, சிவகுரு தெரு, பழனியப்பன் தெரு, ராகவன் தெரு, இளங்கோ தெரு, முருகேசன் தெரு, வெங்கடாசலம் தெரு, ஜான கிராமன் தெரு, எஸ்.பி.சிதம்பரம் சாலை, வடிவேல் தெரு, பூங்காவணம் தெரு,கோவிந்தசாமி தெரு, கிண்டி ரத்தினம் தெரு, அப்பைய மேஸ்திரி தெரு, கங்கையம்மன் கோயில் தெரு, முத்தமிழ் நகர், ஏரிக்கரைதெரு, பள்ளி கூடத் தெரு, பள்ளிக்கூட 1 முதல் 8 வரை உள்ள தெருக்கள் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு...

மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

முத்துமாரியம்மன் கோயில் தெரு, ஆர்.வி.நகர் 75வது தெரு, 76வது தெரு, 69ஏ தெரு, 69வது தெரு, 72வது தெரு, 74வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பிளாக்குகள் - ஐ.ஜெ.கே.எம்.என்.எஸ்.ஓ.பி., ஆர்.வி. நகர் 73வது தெரு, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பிளாக்குள் ஏ - ஏஏ பிளாக்குகள் வரை, 67வது தெரு, 68 வது தெரு, ராகவன் காலனி 1 முதல் 5 தெருக்கள், அண்ணாமலை நகர் 1 முதல் 3 தெருக்கள், பெரியார் ராமசாமி தெரு, பிள்ளையார் கோயில் தெரு, அண்ணா தெரு, காமராஜர் தெரு, வாசுகி தெரு, வ.உ.சி. தெரு, ஜெயராம் தெரு முடிவு.

எனவே மேற்கண்ட வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள், கூட்டணிக்கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எம். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! நகர தேர்தல் அலுவலகம் திறப்பு!

மாங்காட்டில் கு.செல்வப்பெருந்தகை வாக்கு சேகரிக்கிறார்!

நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஏப்.5

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளின் கவனத்திற்கு: இன்று (05.04.2026) காலை 6 மணி எவில் மாங்காடு நகர மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தேர்தல் அலுவலகம் திறப்பு விழா மற்றும் மாங்காடு பகுதிகளில் திருப்பெரும்புதூர் தொகுதியின் வெற்றி வேட்பாளர் கு.செல்வப்பெருந்தகை வாக்கு சேகரிக்க உள்ளார்கள்.

நிகழ்ச்சியில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா.மோ அன்பரசன் வருகை தந்து நிகழ்ச்சி சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே மாங்காடு நகர கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் கு.செல்வப்பெருந்தகை

ஊராட்சிகள் தோறும் பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பு!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப்.5-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கு.செல்வப் பெருந்தகை இன்று (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணி இரவு 7.30 மணி வரை பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்திட உள்ளார்கள்.

எனவே இப்பிரச்சார பிரச்சார நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கு.செல்வப் பெருந்தகை இன்று (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணி இரவு 7.30 மணி வரை பொதுமக்களிடம் வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்திட உள்ளார்கள்.

எனவே இப்பிரச்சார நிகழ்ச்சியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திதர வேண்டும்

இன்று மாலை 4.00 மணி - ஆதனூர், மாலை 5.00 மணி - மாடம்பாக்கம் - லட்சுமிபுரம், வரதராஜபுரம் நீலமங்கலம், கொருக்கந்தாங்கல், மாலை 6.00 மணி காவனூர், மாலை 6.30 மணி காட்டுபாக்கம், வடமேல்பாக்கம், எரிவாக்கம் மேட்டுக்காலனி (ஒரத்தூர்), ஒரத்தூர். இரவு 7.30 மணி - ஆரம்பாக்கம் சாவடி, நாவலூர், செரப்பணஞ்சேரி ஆகிய இடங்களில் காங்கிரஸ் வேட்பாளர் கு.செல்வப்பெருந்தகை வாக்கு சேகரிக்கிறார் என்று ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தெரிவித்துள்ளார்.

கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி – பா.கார்த்திகா பாஸ்கர் எம்.சி. முன்னிலை!

தியாகராயர் நகர் தொகுதி வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகனுக்கு வாகனப் பிரச்சாரம்!

வட்டக் கழகச் செயலாளர் வெல்டிங் ராஜா தலைமையில்!

சென்னை, ஏப்.5-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்குப் பகுதி 132 'அ' வட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் ராஜாஅன்பழகன். அவர்களுக்கு வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா தலைமையில் தியாகாயநகர் மேற்குப்பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கிழக்குப்பகுதி பொறுப்பாளர் கோ.சு.மணி, மாமன்ற உறுப்பினர் திருமதி பா.கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் கீழ்காணும் 132 'அ' வட்டத்திற்கு உட்பட்ட இடங்களில் இன்று (5.04.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை மாலை 4.00 மணி முதல் இரவு 10 மணி வரை இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனத்தில் வாக்கு சேகரிப்பு நடைபெறுகிறது.

ஆகவே இந்த வாக்கு சேகரிப்பில் வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் , வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதி கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் அணி தொண்டர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, பாக முகவர்களின் அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

2026 சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு எழும்பூர் சட்டமன்ற தொகுதி, 58வது வட்ட தி.மு.க. தேர்தல் பணிமனையை வட்ட செயலாளர் வி.விஜயகுமார் தலைமையில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா திறந்து வைத்தார். எழும்பூர் நடைபெற்ற இந்நிகழ்வில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி..சுதாகர், இராஜேஸ்வரிஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், களரிமுத்து, எஸ்.ஜெகதீசன், ஏ.நித்தியராஜ், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, தனஇளங்கோ எம்.முத்து, ஜெ. கார்த்திகேயன், பாபுசேகர், நசீமா பேகம், மாறன், அறிவுநிதி, பிச்சைமுத்து, முரளிகுமார், ரெய்மான், புஸ்பராஜ், துளசிங்கம், சிராஜ் மற்றும் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.சரண்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிடும் மு.திராவிட மணி அவர்கள் தன்னுடைய வேட்பு மனுவினை கூடலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் அதிகாரியான கோட்டாட்சியர் குணசேகரன் இடம் தாக்கல் செய்தார். உடன் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ் குமார். அரசு கொறடா ராமச்சந்திரன் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர்

காரம்பாக்கம் க.கணபதி மதுரவாயல் 153வது வட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்!

வட்டச் செயலாளர் தி.சார்லஸ் அறிக்கை!

சென்னை, ஏப். 05

மதுரவாயல் 153 வது வட்டக் கழகச் செயலாளர் தி. சார்லஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி இன்று (05.04.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில், 153 வது வட்டத்தில் தேர்தல் பணிமனையில் இருந்து குன்றத்தூர் சாலை, பெருமாள் கோவில் தெரு, ஈஸ்வரன் கோவில் தெரு, ஓயர்லெஸ் ஸ்டேஷன் சாலை, ஆர்.ஈ.நகர் 6, 7, 8, 9 வது தெருக்கள், விக்னேஸ்வரா நகர் சேரன் சாலை, பாண்டியன் சாளை, வைகை தெரு, கங்கா காவேரி தெரு, மேல்பள்ளிக்குப்பம், கிருஷ்ணா நகர், துரைசாமி நகர், ராமகிருஷ்ணா நகர் அனெக்ஸ், அரசன் சாலை,ராமசாமி நகர், உதய நகர் 2, 3 வது தெரு, சுரேஷ் நகர் மெயின் ரோடு, சந்தோஷ் நகர்,வைகை தெரு, கிருஷ்ணா தெரு, கணேஷ் அவன்யூ 10 வது தெரு, கமலா நகர் மெயின் ரோடு, சுபஸ்ரீ நகர் 2, 3 வது குறுக்கு தெரு, சுபஸ்ரீ நகர் மெயின் ரோடு, கணேஷ் நகர் மெயின் ரோடு, கணேஷ் அவன்யூ 4வது தெரு, பார்வதி அவன்யூ, 4 வது தெரு, ஸ்டெர்லிங் அவன்யூ, ராம மூர்த்தி அவன்யூ, மங்களா நகர் 10, 9, 8 வது தெருக்கள், அம்பாள் நகர் குறுஞ்சி தெரு, குமுதம் தெரு,மல்லிகை தெரு, மங்களா நகர் 5, 6, 7 ஆகிய தெருக்கள், ட்ரங்க் ரோடு, தெரு, வீதியம்மன் கோவில் 1, 2, 3 ஆகிய தெருக்கள், செட்டி தெரு, பாளையக்காரர் தெரு, யாதவாள் தெரு, வன்னியர் தெரு, மெய்யம்மை தெரு,நாராயணன் தெரு வரை உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கிறார். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி, தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள்கலந்து கொள்கின்றனர்.

ஆகவே இந்நிகழ்ச்சிக்கு 153 வது வட்டத்திற்கு உட்பட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்,வட்டகழகநிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), BDAக்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC), வெல்லும் தமிழ்ப் பெண்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள். கழக முன்னோடிகள், கழக தோழர்கள், கழக செயல்வீரர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

களத்தில் இளைஞரணி என்ற தலைப்பில் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் தா.மோ. அன்பரசனை ஆதரித்து 156வது வார்டு பாகம்-83 ல் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், வட்டக் கழக செயலாளர் ஜெ.செல்வேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள், பி. திருமாறன், ஜி.ஆர். வெங்கடேசன், பகுதி துணைச் செயலாளர் கோ.கோடீஸ்வரன் பகுதி இளைஞரணி அமைப்பாளர் கோ.பிரவிண்குமார், பகுதி மாணவர் அணி அமைப்பாளர் வெ.பிரகாஷ், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ப.இராஜேஷ் ஆகியோர் கழக இளைஞரணி நிர்வாகிகளுடன் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்.